# திகைக்கவைக்கும் ‘தேசப் பொக்கிஷம்’

இப்போது நினைத்தாலும் இந்தியர்களை உணர்ச்சிப்பிழம்பாய் மாற்றிவிடும் சம்பவம் அது. நடந்தது: 1893 ஜூன் மாதம்!

அன்று தென்னாப்பிரிக்காவின் ஜோகனாஸ்பர்க்கில் இருந்து கிளம்பிய ரெயிலில் முதல் வகுப்பு பெட்டியில் காந்திஜி பயணம் செய்துகொண்டிருந்தார். பீட்டர்மெரிட்ஸ்பர்க் என்ற நிலையத்தில் ரெயில் நின்றதும், வெள்ளையர்கள் சிலர் ஏறினார்கள். அவர்கள் முதல் வகுப்பு பெட்டியில் இருந்த காந்திஜியைப் பார்த்ததும் ஆத்திரம் அடைந்தனர். ‘கறுப்பருக்கு இந்த பெட்டியில் இடமில்லை’ என்று, காட்டுக்கூச்சல் போட்டார்கள். காந்திஜி அமைதியாக இருந்தார்.

கூச்சல் கேட்டு, டிக்கெட் பரிசோதகர் வந்தார். அவரிடம் காந்திஜியை சுட்டிக்காட்டி அவரை கீழே இறக்கிவிடுமாறு சொன்னார்கள். காந்திஜியோ, ‘நான் முதல் வகுப்பில் பயணம் செய்ய டிக்கெட் வைத்திருக்கிறேன். அதனால் பயணம் செய்வேன். இறங்க மாட்டேன்’ என்றார்.

ஐக்கிய நாட்டு சபை காந்திஜி பிறந்த அக்டோபர் 2-ந்தேதியை, ‘சர்வதேச அகிம்சை தினமாக’ அறிவித்து அவரது புகழுக்கு மகுடம் சூட்டியது. இதற்கான அறிவிப்பை 2007 ஜூன் 15-ந்தேதி வெளியிட்டது.

காந்திஜியின் 140-வது பிறந்த தினமான அக்டோபர்-2009ல், அவரது ஸ்டாம்பையும் வெளியிட்டு பெருமைப் படுத்தியது. அதில் இடம்பெற்ற காந்திஜியின் ஓவியத்தை உலகப்புகழ் பெற்ற ஓவியர் பெர்டிக் பெச்சிக்கோ வரைந்தார். அனைத்து வண்ணங்களையும் பயன்படுத்தி வரையப்பட்ட அபூர்வ ஓவியம் அதுவாகும்.


ஓவியர் பெர்டிக் பெச்சிக்கோ வரைந்த ஓவியத்தை கொண்டு ஐ.நா. சபையால் வெளியிடப்பட்ட காந்திஜி நினைவு ஸ்டாம்ப்.

உடனே டிக்கெட் பரிசோதகர், ‘அவர்கள் (வெள்ளையர்கள்) உங்கள் அருகில் இருந்து பயணம் செய்யவிரும்பவில்லை. அதனால் நீங்கள் இரண்டாம் வகுப்பு பெட்டிக்கு சென்றுவிடுங்கள்’ என்று கூறிக்கொண்டிருந்தபோதே, அந்த வெள்ளையர்கள் காந்திஜியை பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள்.

பிளாட்பாரத்தில் காந்திஜி விழுந்தார். அப்போதே அவர், தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்கள் மனதில் இடம் பிடித்து எழுந்தார். அந்த சம்பவம் காந்திஜியின் மனதிலும் மிகப் பெரிய உத்வேகத்தை ஏற்படுத்தியது. அந்த உத்வேகம்தான் அவரை போராடத்தூண்டி, அவரை அகிம்சையின் உலக நாயகன் ஆக்கியது.


பீட்டர்மெரிட்ஸ்பர்க் ரெயில் நிலையம்


தென்னாப்பிரிக்க அரசு வெளியிட்ட ஸ்டாம்புகள்.

காலங்கள் உருண்டோடின. காந்திஜியை, வெள்ளையர்கள் கீழே தள்ளிவிட்ட அதே இடத்தில் தென்னாப்பிரிக்க அரசு நினைவிடத்தை அமைத்துள்ளது. அந்த நினைவிடத்துடன் கூடிய ஸ்டாம்ப்பையும், சிறப்பு அஞ்சல் அட்டையையும் வெளியிட்டு காந்திஜியை கவுரவித்தது.


காந்திஜியை கீழே தள்ளிவிட்ட இடத்தில் தென்னாப்பிரிக்க அரசு அமைத்துள்ள நினைவிடம்.

காந்திஜிக்கு இதுவரை இந்தியா 45-க்கும் அதிகமான வகை ஸ்டாம்புகளை வெளியிட்டு புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளது. அதோடு போட்டிபோடும் விதத்தில் செயின்ட் தாமஸ் பிரின்சஸ் தீவுகள் 16 அற்புதமான ஸ்டாம்புகளையும், சாட் என்ற பிரெஞ்சு நாடு 20 ஸ்டாம்புகளையும் வெளியிட்டு காந்திஜிக்கு கவுரவம் சேர்த்துள்ளது.



## தங்க நாணயங்கள்

இரண்டாயிரம் ஆண்டுகளாக நாணயங்களில் உருவம் பொறிக்கப்பட்டுவருகிறது. பல நூற்றாண்டுகள் அந்த நாட்டில், அந்த நாணயங்கள் புழக்கத்தில் இருக்கும் என்பதால் அந்த நாட்டின் மன்னர், தலைவர்களின் உருவங்களே அதில் பொறிக்கப்படும். அந்த நடைமுறையை உலக அளவில் முறியடித்தவர் நமது காந்தி மகான். 15-க்கும் மேற்பட்ட நாடுகள் அவருக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம், நிக்கல், செம்பு, பித்தளை, அலுமினியம் போன்ற பல்வேறு உலோகங்களில் நாணயங்களை வெளியிட்டுள்ளன.

உலக நாடுகள் பொதுவாக மூன்று விதமான நாணயங்களை வெளியிடுகின்றன. அவை: சாதாரண புழக்கத்திற்கானவை, நினைவு நாணயங்கள், யு.என்.சி. எனப்படும் சேகரிப்பு நாணயங்கள்.

சாதாரண நாணயங்கள் கட்டுப்பாடுகள் எதுவும் இன்றி தேவைப்படும்போதெல்லாம் வெளியிடப்படும். நினைவு நாணயங்கள், குறிப்பிட்ட தலைவரை நினைவுபடுத்தும் விதத்தில் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் வெளியிடப்படும். அதனால் இந்த நினைவு நாணயங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு கிடைப்பதற்கு அரியதாகிவிடும். அதனால் அதன் மதிப்பு லட்சகணக்கான ரூபாயில் உயர்ந்து கொண்டே செல்லும். வெளிநாடுகளில் வெளியிடப்பட்ட மகாத்மா காந்தியின் நாணயங்கள், தற்போது விலை மதிப்பற்றதாக மாறி இருக்கிறது. யு.என்.சி எனப்படும் நாணயங்கள் சேகரிப்பாளர்களுக்காக மட்டும் குறைந்த அளவில் வெளியிடப்படுகிறது.

காந்திஜிக்கு முதன் முதலில் நாணயம் வெளியிட்ட வெளிநாடு, ஈக்வடோரியல் கினி. இது மத்திய ஆப்பிரிக்க நாடு. வெள்ளி மற்றும் நிக்கலில் காந்திஜியின் அழகான உருவத்தை பொறித்து வெளியிட்டார்கள். இது அந்த நாட்டில் சாதாரணமாக புழக்கத்தில் விடப்பட்டிருக்கிறது.



ஈக்வடோரியல் கினி நாட்டால் வெளியிடப்பட்ட காந்திஜி உருவம் பொறிக்கப்பட்ட நாணயம்.

அஜ்மன் என்ற அரபு நாடு 1970-ம் ஆண்டு காந்திஜியின் உருவம் பொறிக்கப்பட்ட 15 கிராம் எடைகொண்ட உலோக நாணயத்தை வெளியிட்டது. 1175 நாணயங்களை மட்டுமே வெளியிட்டது. இப்போது இந்த நாணயம் ஒன்றின் மதிப்பு ஒரு லட்சம் ரூபாயை தாண்டிவிட்டது.

சமோவா என்ற நாடு 2003-ல் இந்த தங்க நாணயத்தை காந்திஜியின் உருவத்தை பொறித்து வெளியிட்டது. ஒரு கிராமுக்கும் குறைவான எடை கொண்ட இந்த நாணயத்தில் இரண்டாயிரம் மட்டுமே அப்போது வெளியிடப்பட்டது. இதுவும் கிடைப்பதற்கரிய பொக்கிஷம் ஆகிவிட்டது.



மொரிஷியஸ் வெளியிட்ட 35 கிராம் வெள்ளி ‘காந்திஜி நாணயம்.’

மொரிஷியஸ் நாடு 2001-ல் 35 கிராம் எடைகொண்ட காந்திஜி வெள்ளி நாணயத்தை வெளியிட்டது. ஐந்தாயிரம் மட்டுமே வடிவமைக்கப்பட்டதால் இதுவும் இன்று விலை மதிப்பற்றதாகிவிட்டது.



தென் ஆப்பிரிக்கா வெளியிட்ட அதிக எடை கொண்ட காந்திஜி தங்க நாணயம்.

2008-ம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா காந்திஜியை கவுரவப்படுத்தும் விதத்தில் இரண்டு விதமான தங்க நாணயங்களையும், வெள்ளி நாணயத்தையும் வெளியிட்டது. தங்க நாணயம் 32 கிராம் எடைகொண்டது. இந்த நாணயம்தான் உலகிலே காந்திஜிக்காக வெளியிடப்பட்ட அதிக எடை கொண்ட தங்க நாணயமாகும். காந்திஜியை பெருமைப்படுத்த 7 உலக நாடுகள் தங்க நாணயங்கள் வெளியிட்டுள்ளன.


லைபீரியாவில் வெளியான காந்திஜி தங்க நாணயம்.

லைபீரியா 2001-ம் ஆண்டில் இந்த தங்க நாணயத்தை வெளியிட்டது. இதில் 2 ஆயிரம் மட்டுமே வடிவமைத்து வெளியிட்டார்கள். கூடவே வெள்ளி, நிக்கல் நாணயங்களும் தனித்தனியாக வெளியிடப்பட்டன.

- தொடரும்.

(இடம் பெற்றிருக்கும் அபூர்வ நாணயங்களும், தகவல்களும் சேகரித்தவர்: கும்மிடிப்பூண்டி எம்.எல்.ராஜேஷ்.)